# எய்ட்ஸ் பற்றிய கட்டுக்கதைகள் மற்றும் தவறான கருத்துக்கள்

## (AIDS MYTHS AND MISUNDERSTANDINGS) Fact Sheet Number 158

அத்தியாயம்

**எய்ட்ஸ் பற்றிய கட்டுக்கதைகள் ஏன் அதிகமாக உள்ளது?**
எய்ட்ஸ் பற்றி முதலில் தெரிந்த பொழுது, அது ஒரு இரகசியமான நோயாகவும் மற்றும் அதிக மக்களின் மரணத்திற்க்கு காரணமாகவும் இருந்தது. இந்நோயைப் பற்றி விளக்கமளிக்கப்படாத அல்லது பதில் அளிக்கப்படாத கேள்விகள் இன்னமும் ஏராளமாக உள்ளன. அதிகமான மக்கள் பயப்படுவதோடு மட்டுமல்லாமல் கதைகளின் மூலமாக தங்களது பயத்தினை தெரியபடுத்துகின்றனர். இக்கட்டுகதைகள் பெரும்பாலானவை எப்படி ஒருவருக்கு சுலபமாக எச்ஐவி தொற்று வரும் என்பதையே கூருகிறது.

**எய்ட்ஸ் பரவுதல் பற்றிய கட்டுக்கதைகள்:**
எச்ஐவி மற்றும் எய்ட்ஸ் ஆனது கொசுக்கடி மூலமாகவும், எய்ட்ஸ் பாதிக்கப்பட்டவர் பயன்படுத்திய கோப்பையை பகிர்ந்து கொள்ளூதல் மூலமாகவும், எய்ட்ஸால் பாதிக்கப்பட்டவர் இருமும் பொழுது அருகில் இருப்பதன் மூலமாகவும், எய்ட்ஸால் பாதிக்கப்பட்டவரை கட்டிப்பிடிப்பது மற்றும் முத்தம் கொடுப்பதன் மூலமாகவும் பரவும் என அதிகமாக மக்கள் நம்புகின்றனர். எச்ஐவி எப்படி பரவுகின்றது என்பதனை பற்றி தெரிந்து கொள்ள fact sheet 150 ஐ பார்க்கவும். எச்ஐவி தொற்று உள்ள ஒரு நபரின் இரத்தம், விந்து, பெண்குறி நீர் மற்றும் தாய்ப்பால் உடன் தொடர்பு எற்படும் பொழுது மட்டும் தான் எச்ஐவி ஆனது பரவும் (மேலும் விபரங்களுக்கு fact sheet 611 ஐ பார்க்கவும்). எச்ஐவியால் பதிக்கப்பட்ட ஒரு நபரின் கண்ணீர் மற்றும் எச்சில் மூலமாக எச்ஐவி பரவியதாக ஆதாரப்பூர்வமான அறிக்கை இதுவரை ஏதும் இல்லை.

**கட்டுக்கதை:** எச்ஐவியால் பதிக்கப்பட்ட ஒரு பெண், எச்ஐவி தொற்று இல்லாத குழந்தையை பெற இயலாது.

**உண்மை நிலை:** எந்த விதமான சிகிச்சையும் எடுத்துக்கொள்ளாமல் இருக்கும் எச்ஐவி தொற்று உள்ள தாய்க்கு பிறக்கும் 25 % குழந்தைக்கு மட்டுமே எச்ஐவி பரவுவதற்க்கான வாய்ப்பு உள்ளது. இருந்தபோதிலும், நவீன மருத்துவத்தின் மூலம் இந்த விகிதம் 2 % ற்கு குறைந்துள்ளது (மேலும் எச்ஐவி மற்றும் கருவுருதல் பற்றிய விபரங்களை அறிய fact sheet 611 ஐ பார்க்கவும்).

**கட்டுக்கதை:** எச்ஐவி ஆனது திரை அரங்கில் உள்ள இருக்கையில் விடப்பட்ட ஊசி அல்லது தாணியங்கி இயந்திரங்களில் (வணிகத்திற்க்கு பயன்படுத்துபவை) இருந்து பெறப்படும் நாணயத்தின் மூலம் பரவும்.

**உண்மை நிலை:** மேற்கூறிய காரணங்களினால் எச்ஐவி பரவியதற்கான ஆதாரப்பூர்வமான அறிக்கை ஏதும் இல்லை.

**சிகிச்சை / குணமடைதல் பற்றிய கட்டுக்கதைகள்:**
ஒருவர் தனக்கு எச்ஐவி தொற்று உள்ளது என்று ஏற்றுக்கொள்வதற்க்கே பயமாகவும் தயக்கமாகவும் உள்ளது. இந்த நோயின் முதிர்ச்சி நிலையை முன்கூட்டியே கணிக்க இயலாது. சிலர் குறைந்த சில மாதங்களிலேயே மிகவும் நோய்வாய் பட்டு விடுகின்றனர், மற்றவர்களோ 20 வருடம் அல்லது அதற்க்கு மேலாகவும் நலமுடன் வாழ்கின்றனர். ஆபத்தான பக்க விளைவுகளுடன் சிகிச்சை எடுத்துக்கொள்வது மிகவும் சிரமம். பொருளாதார சிக்கல்கலால் இம்மருந்தினை அனைவராலும் எடுக்கமுடிவதில்லை. மருத்துவ மோசடி செய்பவர்கள் பல வகையான பொருள்களின் மூலம் எச்ஐவியை குணப்படுத்த கொண்டுவரும் பல சிகிச்சைகள் ஆச்சர்யப்படுவதற்க்கு இல்லை. துரதிர்ஷ்டமாக இம்மாதிரீயான சிகிச்சைகள் பயனளிப்பதில்லை. (எய்ட்ஸ் மோசடி பற்றிய மேலும் விபரங்களை அறிய fact sheet 206 ஐ பார்க்கவும்).

உலகத்தின் சில பகுதிகளில் மிகவும் பரிதாபகரமான கட்டுக்கதைகளின் ஒன்றான “கன்னிப்பெண்ணுடன் உடலுறவு கொண்டால் எய்ட்ஸ் குணம் அடையும்” என்ற கருத்து உள்ளது. இதன் விளைவாக அதிகமான இளம் பெண்கள் எச்ஐவி ஆல் பாதிக்கப்பட்டு எய்ட்ஸ் நிலைக்கு ஆளாகுகின்றனர் / தள்ளப்படுகின்றனர். இக்கூற்றை நிரூபிக்க போதிய ஆதாரங்கள் இல்லை.

**கட்டுக்கதை:** தற்போதைய மருத்துவம் எய்ட்சை குணப்படுத்தும் அதனால் எச்ஐவி ஆல் பாதிக்கப்பட்டாலும் அது ஒரு பெரிய பிரச்சினையாக இருக்காது.

**உண்மை நிலை:** எச்ஐவி / எய்ட்ஸ் ஒரு தொடர்ச்சியாக பராமரிக்கக்கூடிய நோய். எய்ட்ஸினால் ஏற்படக்கூடிய இறப்பு விகிதத்தை இன்றைய மருத்துவம் குறைத்துள்ளது. இந்த மருத்துவம் எடுத்துக்கொள்வதற்க்கு மற்றும் பயன்படுத்துவதற்க்கு மிகவும் சுலபம். இருப்பினும், இவை பக்க விளைவினை ஏற்படுத்தும், விலை அதிகமானது மற்றும் வாழ்நாள் முழுவதும் தினமும் எடுத்துக்கொள்ள வேண்டும். மாத்திரையை சரியாக எடுத்துக்கொள்ளாவிட்டால், எச்ஐவி யானது அந்த மருந்திற்க்கு எதிராக “எதிர் திறன்” பெற்றுவிடும் (மேலும் விபரங்களுக்கு fact sheet 126 ஐ பார்க்கவும்) மேலும் மருந்து பலன் அளிக்காமல் போய்விடும்.

**எய்ட்ஸ் ஒரு மரண தண்டனை:**
1980 ல் எய்ட்ஸினால் இறப்பு விகிதம் மிகவும் அதிகமாக இருந்தது. இருப்பினும், எச்ஐவி தொற்றால் பாதிக்கப்பட்டவரின் வாழ்நாளை மருத்துவம் நீட்டிக்கிறது. எஆர்வி மருந்து மற்றும் தொடர்ச்சியான மருத்துவ ஆலோசனை மற்றும் பரிசோதனை எடுத்துக்கொண்டால், எச்ஐவி தொற்று அல்லது எய்ட்ஸ் இருந்தாலும் கூட நீண்ட நாட்களுக்கு உயிருடன் வாழலாம்.

**மருந்துகள் / மருத்துவம் பற்றிய கட்டுக்கதைகள்:**
மருத்துவர்கள் தனது நோயாளிகளுக்கு சரியான எஆர்வி மருந்துகளை தேர்ந்தெடுப்பதற்கு அதிக சவால்களை சந்திக்கின்றனர் அல்லது எதிர்கொள்கின்றனர். முதலில் எஆர்வி மருந்துகள் கண்டுபிடித்த பொழுது ஒரு நாளைக்கு மூன்று முறை மருந்துகளை உட்கொள்ள வேண்டியிருந்தது. சில மருந்துகளுக்கு பத்திரபடுத்துதல் மற்றும் சேமித்துவைப்பதில் அல்லது எந்த வகையான உணவுகளுடன் உட்கொள்வது (அல்லது சாப்பிட்டபிறகு மாத்திரை எடுப்பதற்க்கு எவ்வளவு நேரம் இடைவெளி விடவேண்டும்) என்பதில் சிக்கல்கள் இருந்தது. தற்பொழுது எஆர்வி மருந்தின் உண்மை நிலை மாறியுள்ளது. இருப்பினும், சில கட்டுக்கதைகள் உள்ளன.

**கட்டுக்கதை:** நீங்கள் சரியாக 12 (அல்லது 8 அல்லது 24) மணி நேரத்திற்க்கு ஒருமுறை மாத்திரையை எடுத்துக்கொள்ள வேண்டும்.

**உண்மை நிலை:** இந்நாட்க்களில் கிடைக்கும் மருந்துகள் மிகச் சிரமமின்றி எடுத்துக்கொள்ளும் வகையில் இருக்கின்றன. என்றபோதிலும், சரியான நேரத்தில் மருந்துகளை எடுத்துக்கொள்வதன் மூலம் இரத்தத்தில் உள்ள மருந்தின் அளவினை சீராக வைத்துக்கொள்ள முடியும். ஒரு மணி நேரம் தாமதமாக எடுத்துக்கொண்டாலும் மருந்துகள் வேலை செய்யாமல் இருக்காது. இருப்பினும் ரிட்டினாவிர் அல்லாமல் இன்டினாவிர் எடுத்துக்கொள்ளும் மக்கள் (நோயாளிகள்) நேரத்தை கடைப்பிடிப்பதில் கவனமாக இருக்கவேண்டும். (நேகோ எஆர்டி கைடுலைன் 2007 ல் பக்கம் 54 ஐ பார்க்கவும், http://www.nacoonline.org/quick links/publication/ treatment care support/operational guidelines and policies/operational guidelines for ART centers/ )

**கட்டுக்கதை:** நீங்கள் 100 % மாத்திரையை சரியான நேரத்திற்க்கு எடுத்துக்கொள்ள வேண்டும் இல்லையென்றால் மாத்திரை பலனளிக்காமல் போய்விடும்.

**உண்மை நிலை:** எய்ட்ஸ் மருந்துகளை சரியாக எடுத்துக்கொள்வது மிகவும் அவசியம். உண்மையில் 5 % மேலாக மாத்திரையை எடுக்க தவறினால், எச்ஐவி யானது மாத்திரைக்கு எதிரான எதிர்ப்பு திறனை உருவாக்கிக்கொள்ளும் (மேலும் விபரங்களுக்கு fact sheet 126 ஐ பார்க்கவும்) மற்றும் எஆர்வி மருந்துகளை எடுத்துக்கொண்டாலும் கூட தனது (எச்ஐவி வைரஸ்) எண்ணிக்கையை அதிகரித்துக்கொள்ளும். இருப்பினும், 100 % சரியாக மத்திரையை எடுத்துக்கொள்வதற்க்கு யாருக்கும் சாத்தியமில்லை. உங்களால் முடிந்த அளவிற்க்கு சரியாக எடுத்துக்கொள்ளவும், ஆனால் உங்கள் மருத்துவ குழுவினரிடம் என்ன நடந்துகொண்டு இருக்கிறது என்பதனை தெரியபடுத்தவும்.

**கட்டுக்கதை:** தற்போதைய மருந்துகள் மிகவும் சக்திவாய்ந்தது நீங்கள் எந்த பிரச்சனையும் இன்றி மருந்து எடுத்துக்கொள்வதை நிறுத்தலாம் (மருந்து எடுப்பதற்க்கு விடுமுறை விடுதல்).

**உண்மை நிலை:** முதல் எய்ட்ஸ் மருந்து கண்டுபிடித்த நாளிலிருந்து இன்றுவரை, நோயாளிகளுக்கு வரும் பக்க விளைவுகளின் காரணமாகவும் அல்லது தங்களுக்கு எய்ட்ஸ் உள்ளது என்பதனை நினைத்துக்கொண்டு இருப்பதாலும் (மற்றும் அவர்கள் தாங்கள் எய்ட்ஸ்சினால் பாதிக்கப்படிருக்கிறார்கள் என்பதனை மறப்பதற்க்காக) மருந்து எடுத்துக்கொள்வதை நிறுத்த விரும்புகின்றனர். சிகிச்சையை நிறுத்துதல் / தடைசெய்தல் என்ற தலைப்பில் நடத்தப்பட்ட பல்வேறு ஆய்வில், எஆர்வி எடுத்துக்கொள்வதை நிறுத்துவதால் அதிக பிரச்சினைகளை ஏற்படுத்தும் என விளக்கியுள்ளன. நீங்கள் வைரஸ் எண்ணிக்கையை அதிகபடுத்திக் கொள்வதற்கும் (வைரஸ் எண்ணிக்கையை பற்றி fact sheet 125 ஐ பார்க்கவும்) அல்லது சிடி4 எண்ணிக்கை குறைவதற்க்கும் வாய்ப்பினை கொடுப்பீர்கள் (fact sheet 125 ஐ பார்க்கவும்), நோய் எதிர்ப்பு சக்தி குறைவதன் ஒரு அறிகுறியாகும்.

**கட்டுக்கதை:** எய்ட்ஸ் மருந்துகள் விஷம் போன்றது மற்றும் அவைகள் எச்ஐவி வைரஸை விட மிகவும் ஆபத்தானது.

**உண்மை நிலை:** எய்ட்ஸிற்கான மருந்துகள் கண்டுபிடித்த நாட்களில் அவைகள் இன்றைய நாட்களில் மருந்துகளை போல சிறப்பாக இருக்கவில்லை. இருப்பினும் மக்கள் எய்ட்ஸிற்குறிய நோய்களினால் இறந்து கொண்டே இருந்தனர். ஆம், பலர் மிக மோசமான பக்க விளைவுகளால் பாதிக்கப்பட்டும் இருந்தனர், அவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் 5 % க்குள் இருந்தனர். ஆராய்ச்சியாளர்கள் எச்ஐவி ற்காக மருந்தினை அதிக சிரமமின்றி மற்றும் பக்க விளைவுகள் குறைவாக இருக்கும் வண்ணம் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளன்ர்.